3. கவன ஈர்ப்பு.

வேலூர் நகராட்சி மன்ற சுதந்திரா உறுப்பினர் திரு. வி. கே. கண்ணப்பன் கொலை செய்யப்பட்டதும் அதனால் அப்பகுதியில் நிலவும் அமைதியின்மையும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, விதி 41-இன் கீழ் டாக்டர் எச். வி. ஹாண்டே அவர்கள் அவசரப் பொது முக்கியம் வாய்ந்த ஒரு காரியத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் வேலூர் நகராட்சி மன்ற சுதந்திரா உறுப்பினராகிய திரு. வி. கே. கண்ணப்பன் அவர்கள் வேலூரிலுள்ள சைதாப்பேட்டையில் 28–12–1969 அன்று கொலை செய்யப்பட்டதன் விளைவாக அப் பகுதிவாழ் மக்களிடையே நிலவும் அமைதியின்மை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

4. நடைமுறைக் கேள்வி.

வழக்குமன்றத்தின்முன் இருக்கும் ஒரு வழக்கு குறித்து மன்றத்தில் விவாதம் எழுப்புதல்.

THIRU K. VINAYAKAM: On a point of order, Sir, Is not this matter pending before a Court of Enquiry? Is it not sub-judice? Why should it be raised here? Why should we embarrass the Government to make a statement which will vitiate the judgment to be given by the judging authorities?

(THIRU T. MARTIN: Certainly.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் வழக்குக்குக் குந்தகம் விளைவிக்கும் விஷயத்தைப் பற்றி ஒன்றுமே கேட்கவில்லை.

THIRU K. VINAYAKAM: I do not now whether I am understood correctly. நீங்கள் சொல்வது சரி. ஆனால் இந்த விஷயம் கோர்ட்டிலே—இன்னும் எப்.ஐ.ஆர். கூடப் போடவில்லை. சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. புலன் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் இப் பிரச்சினையை எழுப்பியிருக்கக்கூடாது. அதற்கு அரசாங்கமும் இசைவு தந்து அறிக்கை வைக்க முன் வந்திருக்கக் கூடாது. இதில் கட்சிகளை மறந்துவிடுவோம். சுதந்திராக் கட்சிக்காரர் என்பதற்காக எழுப்புவதும், திராவிட முன்னேற்றக் கழகம் இதில் அனுதாபத்துடன் இருப்பதாக அறிக்கை விட முன் வருவதும் சரியல்ல. ஒரு கொலை நடந்திருக்கிறது, குற்றவாளி யார் என்று தெரியவில்லை. கண்டு பிடிக்க வேண்டும். இந்த நேரத்தில் . . .